உ

கடவுள் துணை.

# தென்னமரக் கும்மி.



சென்னை சூளை

பெரியநாயகியம்மன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

52

வே ஜெயவேலு முதலியார்,

29, ஆரிமுத்துமேஸ்திரி தெரு, சூளை மதராஸ்.

---

# ஸ்ரீ பகவத்கீதை வசனம்.

இந்தப் பகவத்கீதை யென்னும் அரிய நூலானது ஆதியில் வேதவியாசரால் மூன்று காண்டங்களாகவும், பதினெட்டு அத்தியாயங்களாகவும் எழுநூறு சுலோகங்களாகவும், வடமொழியில் இயற்றப்பெற்றது; இவ்வசன நூல் முழுவதையும் இதனீற்றிற் சேர்க்கப் பெற்றிருக்கும் ஸ்ரீபகவத்கீதா மான்மியத்தையும் பக்தியோடு வாசிப்போர்க்கு இதன் உயர்வனைத்தும் நன்கு விளங்கும். மனிதராயினோர்க்கு எல்லாத் தத்துவங்களையும் விளக்கிக்காட்டி, உண்மைப் பொருளையடைதற்குரிய உபாயங்களை உபதேசிக்கும் நூல்களுள் இதுவே முதன்மை பெற்றதாகும் இங்ஙனம் இது சிறப்புடைய தாயிருத்தல் பற்றியே ஸ்ரீசங்கராசாரியார், ஸ்ரீராமாநுஜாச்சாரியார், ஸ்ரீமத்வாச்சாரியார் முதலியவர்கள் பாஷியங்களுமியற்றி யிருக்கின்றனர்; இந்நூலை ஆங்கிலம் முதலிய பாஷைகளிலும் மொழிபெயர்த் திருக்கின்றனர்.

இதன் விலை ரூபா 1 8 0 ஷை பாக்கிட் சபிஸ் அணா 10

உ

# தென்னமரக்கும்மி.

## கலி விருத்தம்.

சொல்லுமாயனின் தோற்றும்பதாம்புயத்
தல்லுமேபகல் தலையால்பலன்றரும்
புல்லுங்தேங்கின் புகழுஞ்சரிதையை
வெல்லுமாங்தற்கு விரும்பியுரைக்குவாம்.

## கதையின் வாலாறு.

சோபனமடிசோபனமே சிவசோபனந்தமிழ்ப்பாட
அச்சோடிபெண்காசோபனமே அம்மாடிபெண்காசோபனமே
தென்னமரமேதென்னமரமே யேன்வளர்ந்தாய்தென்மரயே
நான்வளர்ந்தகாரியத்தை நாட்டாரறியாரோ
ஓங்கிவளர்ந்தகதை ஊராரறியாரோ
அறியாட்டாச்சொல்லுகிறேன் அச்சோடிபெண்காசோபனமே
தெரியாட்டாச்சொல்லுகிறேன் தேசமெங்குஞ்சோபனமே

தென்மரமானவகை தெரியப்படுத்துகிறேன்
மரமாகநான்வளர்ந்து மண்டலத்திலுள்ளவர்க்கு
எத்தமெறைப்பதற்கு யிசைந்தகயராவேன்
வாத்தியாக்குப்பிள்ளைகட்கும் வாய்த்தநிழலாவேன்
அடிசல்சமைப்பதற்கு அடுப்புக்குவுதவிடுவேன்
தென்னபட்டைவோலையாகி தேசத்திலுள்ளவர்க்கு
புட்பமெடுப்பதற்கு பூச்குடலைநானாவேன்
கோவில்தலங்களுக்கு குளிர்ந்தபந்தலாகிடுவேன்
கலியாணவாசலுக்கு கனத்தபந்தலாயிருப்பேன்
சீமந்தவாசலுக்கு சிறந்தபந்தலாகிடுவேன்
சொற்பெரியநற்சபைக்கு சுழல்பந்தலாகிடுவேன்
சகலஜெனகாரியத்துக்கு ஜாக்கிரதையாயிருப்பேன்
மாளிகைக்குமறவாவேன் மாந்தருக்குநிழலாவேன்
சன்னதிகள்சுத்திசெய்ய சார்விளக்குமாறுவேன்
மழைநாளில்சம்மங்குடை மன்னர்தலைமேலிருப்பேன்
குருத்தோலையெனையெடுத்து கூந்தலென்றுகட்டிடுவார்
செத்துமடிவார்க்கு சிவலோகப்பாயாவேன்
மாண்டுமடிவார்க்கு வைகுந்தப்பாயாவேன்
கூட்டம்மறப்புகட்ட குறுத்துவிரிவோலையாவேன்

பச்சோலைதன்னுடனே பன்னாடைநானாகி
கள்ளுவடிகட்டி கசடெல்லாம்போக்கிடுவேன்
மதுப்பானைவேடுகட்டி மன்னர்தலைமேலிருப்பேன்
அடுப்பெரியாபெண்களுக்கு அடுப்பூதிபத்தவைப்பேன்
பாளையென்றேநான்பிறந்து பலதினுசுக்குதவியாக
தென்னங்குருத்துடனே தெருபந்தலில்கட்டுவார்
வாசலதுபந்தலிலே வரிசையுடன்கட்டிவைப்பார்
பதிவிளக்குஜோடிப்பார் பாற்றெளிக்கவெனையழைப்பார்
நோன்புநோர்க்கும்கலசத்தண்டை நூதனமாபோயிருப்பேன்
பாளைவளர்ந்தவுடன் பதப்படுத்தியெனைத்திருத்தி
குடுவையிலேகள்ளிறக்கி கொண்டிடுவார்வேணமட்டும்
களைத்துவருவார்க்கு கள்ளுதண்ணிநானாவேன்
தேடிவருவார்க்கு தித்திப்புகள்ளாவேன்
பாடிவருவார்க்கு பாட்டாவுந்தானாவேன்
என்னைக்குடித்தவர்கள் யெனைப்புகழ்ந்துகொண்டாடி
பித்தம்பிடித்தவர்போல் பேசாதும்பேசிடுவார்
மானிடர்க்குள்நான்புகுந்து மாராட்டஞ்செய்துவைப்பேன்
சண்டைகளுமென்னாலே சவுரியமுமென்னாலே
ஆண்மைகளுமென்னாலே அடிதடிகளென்னாலே

சூத்துகெட்டுமென்றலே குடிகெடுவதுமென்றலே
கீழ்விழுந்துமேல்புரண்டு செவிப்பதுமென்றலே
கச்சேரிகோர்ட்டுகளை கண்டறிவதுமென்றலே
பெண்டுபிள்ளைதாவிவிற்று பேர்கெடுவதுமென்றலே
அழியாதசெல்வங்களை அழிப்பதுவுமென்றலே
குறையாதசெல்வங்களைக் குறைப்பதுவுமென்றலே
காணிவிற்பதுவுமென்றலே கடன்படுவதுமென்றலே
பூமிவிற்பதுமென்றலே புண்படுவதுமென்றலே
சபையிலுள்ளபேர்களெல்லாந் தலைகுனிவதுமென்றலே
கொற்றவருமாதர்களுங் குணங்கெடுவதுமென்றலே
மன்னர்களுமாதர்களு மனமழிவதுமென்றலே
சீச்சீயென்பதுமென்றலே சீரழிவதுமென்றலே
போபோவென்பதுமென்றலே பொல்லாங்காவதுமென்றலே
ஆப்பஞ்சுடவுதவிடுவேன் அழகுரொட்டிக்காகிடுவேன்
குவலயத்திற்கொழுந்தைகளை கூசாமல்வளர்த்திடுவேன்
சத்திமதுரைபூசையிலே சந்தோஷமானாளிருப்பேன்
மற்றுமொருபாளையது மாராமலேவெடித்து
தென்னங்குரும்பியாகி தேசத்திலுள்ளவர்க்கு
சீதக்கழிச்சலுக்கு சிக்குபெரும்பாடுக்கும்

உற்றவுதகியாகி உடனேநான்போக்கடிப்பேன்
பாரஉருவாகி பாலேடுபோல்படிந்து
ஆலயங்கள்பூசையிலே அபிஷேகமாயிடுவேன்
நீரடைப்புகண்டதற்கு நேர்மையுடன்தீர்த்திடுவேன்
தேங்காயாநான்வளர்ந்து தேசத்திலுள்ளவர்க்கு
விக்கினவிநாயகற்கு விருப்பமுடனெனையுடைப்பார்
தேவர்கட்குபூசையென்றால் தேடியெனையழைத்திடுவார்
எங்தெந்தபிரார்த்தினைக்கு யெந்தனையேகூப்பிடுவார்
அம்புவியில்கழிப்புசுற்ற அவ்விடத்தில்போயிருப்பேன்
கூட்டுக்கரிக்காயிடுவேன் கொழம்புகளுக்குகந்திடுவேன்
தொகையலுக்குநானாவேன் தொவட்டலுக்குநானாவேன்
பச்சடிக்குநானாவேன் பால்பிழியநானாவேன்
விருந்துக்குகந்திடுவேன் வேசியிடுமருந்தெடுப்பேன்
தேங்காய்ப்பாலாகிடுவேன் திருவிளக்குயெண்ணையாவேன்
வால்செட்டுகுலோப்புகளும் வகைலஸ்டர்குள்ளிருப்பேன்
கொட்டாங்கச்சிநானாகி குவலயத்திலுள்ளவர்க்கு
சாதங்கறிவகைகள் சமைப்பதுவுமென்னாலே
திருஷணத்துகுடுக்கையாவேன் தேங்காநார்நானாவேன்
அறுசுவைகள்சமைப்பதற்கு அகப்பையதுநானாவேன்

தென்னமரக்கும்மிதனை சீர்திருத்திப்பாடினோரும்
அச்சிலடித்தவரும் அழகுசெனனையாள்பவரும்
ஆதிசிவன்தன்னருளால் அவனிதனில்வாழ்ந்திடுவார்
பட்டாளம்கண்ணுசாமி பரமனருள்பெற்றுவாழி
திருச்சிறைப்பள்ளிஇரங்கசாமி செல்வன்மிகவாழி

தென்னமரக்கும்மி

முற்றிற்று.

---